**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2017–2018 ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவிப்புகள் – 2017–18ஆம் நிதியாண்டு கால்கள் பாதிக்கப்பட்ட 2000 மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டம்– நிருவாக அனுமதி வழங்குதல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நலத்(மா.தி.ந.2.1) துறை

அரசாணை (நிலை) எண்.20 நாள்: 22–05–2017

ஹேவிளம்பி, வைகாசி 8,

திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:–

1. அரசாணை(1டி) எண்.83, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 25–11–2016.
2. 2017–2018 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் ந.க.எண்.1437/உ.உ.–பிரிவு/2017, நாள் 03.04.2017.

-----

**<u>ஆணை:</u>**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2016–2017 ஆம் நிதியாண்டில், இரண்டு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் வழங்கப்படும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தினை தொடர, திட்டத் தொடராணையும், அந்நிதியாண்டில் 1000 எண்ணிக்கையில் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வாங்கி வழங்கிட ரூ.5,98,64,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 16.03.2017 அன்று 2017–2018 ஆம் நிதியாண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் ஏனைய அறிவிப்புகளுள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்:-

“மாற்றுத் திறனாளிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களின் எண்ணிக்கை ஆண்டு ஒன்றிற்கு 1,000லிருந்து 2,000 மாக உயர்த்தப்படும், இதற்கென 11.97 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.”

3. மேலே மூன்றவாதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கருத்துருவில் 2017–18 ஆம் நிதியாண்டு, கால்கள் பாதிக்கப்பட்ட 2000 மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்குவதற்காக கடந்த நிதியாண்டு (2016–17) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைவிட கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவிப்பினை தொடர்ந்து மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2017–18 ஆம் நிதியாண்டு கால்கள் பாதிக்கப்பட்ட 2000 மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்க நடைமுறையில் உள்ள கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிருவாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(i) இருசக்கர வாகனங்களுக்கான கொள்முதல் நடவடிக்கைகள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) கொள்முதல் நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு விலைப்புள்ளிகளின் அடிப்படையில் நிதித் தேவை நிர்ணயிக்கப்பட்ட பின்னர் செலவின ஒப்பளிப்பு ஆணை தனியாக வெளியிடப்படும்.

(iii) இருசக்கர வாகனத்தின் மொத்த கொள்முதல் விலை நிதியொதுக்கத்திற்குள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.26101/நிதி(சந)/2017, நாள் 17.05.2017–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர்,சென்னை–18.

**நகல்:–**
நிதி (சந) துறை, சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சர் அலுவலகம், சென்னை–9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.